உ

சிவமயம்.

# சடாக்ஷர விருத்தம்



இரண்டாம் பதிப்பு

ஸ்ரீ ஜெயலெக்ஷிமி விலாஸ பிரஸில்

அச்சிடப் பெற்று வெளியிடப் பட்டது.

விலை 1939

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

மலையாளம் உசரவிளை

குமராண்டி ஞானியா ரருளிச் செய்த

ஹரி முதல், ஃ வரைக்கும்

சிவசுப்பிரமணியக் கடவுள்பேரில்

# சடாக்ஷர விருத்தம் 23

போதிகையிலெழுந்தருளிய

அகத்திய முனிவரருளிச்செய்த

# மனோன்மணிபூசைச்சோடசம் 16

இராமநாதபுரம் ஆத்தங்கரை யென்று

வழங்குகின்ற ஆறைமாநகர்

பரமானந்தசுவாமிகளருளிச்செய்த

# பரசிவமாலை

இவை மூன்று மிதிலடங்கியிருக்கின்றன

இவை

சிதம்பரம் புஸ்தக ஷாப்

சி. ஜி. ராமானுஜ செட்டியார் அவர்களால்

ஸ்ரீ ஜெயலெக்ஷிமி விலாஸம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

உ

திருச்சிற்றம்பலம்.

விநாயகர்ஸ்துதி,

வெண்பா:

ஓங்காரத் துள்ளே யுதிக்கும் பரம்பொருளே
நீங்காமல் நெஞ்சகத்தில் நீயிருந்து—பாங்காக
வென்னையேகாப்பாயீஸ்வரியாள் தம்பாலா
வுன்னைத்துதிப்பே னுளத்து

## சுப்பிரமணியர் ஸ்தோத்திர அகவல்

ஓம் சரஹண பவனே சத்ரு சங்கார
ஹர ஹர முருகாவுன் னடியிணை போற்றி
வரைபகிர் பகிர்ந்த வடிவேற் றரித்த
குறவர் நாயகா கொற்றவா சரணம்
வெள்ளியங் கிரியில் மேலை வாயிலிற்
றெள்ளிய குருவே சிவ சிவா சரணம்
பொன்மலை மேவிப் பொருந்திய தெற்கு
நன்மனை வாசா நாடியே காக்க
ஆதியே சோதியே அந்தமுந் தானாய்
ஓதியே குருவேயுன் னடியிணை சரணம்
வேதனைப்பிரணவம் விளம்பெனச் சொல்ல
மாதவன் சொல்ல மாட்டாத படியாற்
போதனைச்சிறையிற் போட்டவன் வைத்த
நாதனே குருவே நமோ நமோ சரணம்
கேசவன் மகனுடன் கிரௌஞ்ச மலையை
வசையறத் துளைத்த வடிவேல் சரணம்

# அகவல்

பானுகோ பனன் பட்டதன் சிறந்த
வேக படமாய்ச் சொல்லியே போக
மெஞ்ஞான விஞ்சச் சொல் மேனியிற் சிறந்து
தஞ் சதமா கச்செய்த சாமியே சரணம்
ஜெகத்துக் குருவாய்த் தென்மலை வாழும்
அகஸ்தியர் குருவேயுன் னடியிணை சரணம்
செந்தூர் பழனி திருப்பரங் குன்றம்
அந்தா விநன்குடி யழகர் கோயில்
எட்டுச் சேரி யிசைந்த கதிர்காமம்
மட்டிலாக் கண்டி வளர்ந்தவா சரணம்
குன்னக் குடியுங் கொடுமலூர் முதல்
திண்ணமா யுடுப்பை சிக்கல்புறவாச்சேரி
மூகவா புரியு முழங்கிய பெருவரால்
அசமா யிருக்கின்ற ஆதியே சரணம்
சாமி கிரியுஞ் சதுர கிரியுடன்
காம கிரியுங் கழுகுமா மலையும்
வீற்றிருக் கின்ற வேலவா சரணம்
பொதிகை வரையுடன் பொருந்திய வேள்விப்
பதிமலை வாழும் பார்த்திபா சரணம்
தோகை மலையுஞ் சுருளி வரையுடன்
நாக மலையும் நலமதாய் வாழும்
வாகுடன் கொல்லி மலைவி ராலி
நாகமுற் றிருக்கும் நாயகா சரணம்
காசினி தன்னிற் கருத்துடன் வழங்கும்
ஓம்சிவநாதா ஓங்கார வடிவேல்
கந்தா முருகா காங்கேயா குமரா
செந்தில்நா யகனே சேவலங் கொடியாய்
குகனே விசாகா குருபர வேலா

ககன சேனாதிபதி கார்த்திகை நேசா
வையாபுரியாய் மயிலேறியதோர்
ஐயா பெரியவா ஆறு முகவா
பழனி யாண்டி பரம குருவே
வாலசுப்ர மண்யா வடிவேல் சரணம்
ஆறு முகமு மாறிரண்டு புஜமும்
கூறிய வேலுங் கொடியுஞ் சேவலுமாய்
ஈராறு விழிக ளிலங்கு வெண்ணீறும்
வார்சடை தெய்வானை வள்ளி மனோகரா
தோகையின் மீதேறித் தோன்றி வந்திடுவாய்
ஆகுவா கன னருள்பெருந் துணைவா
வந்துமுன் தோன்றியென் வறுமையை யகற்றிச்
சிந்தனை யன்றிச் சேர்ப்பதுன் பாதம்
சரஹண பவனே சத்குரு சங்காரா
ஹரஹர முருகா வுன்னடியிணை போற்றி

## கலி நிலைத்துறை

செந்தில்நாயகனேபோற்றி சேவலங்கொடியாய்போற்றி
நந்திமாமகனேபோற்றி நாதாந்தகுருவே போற்றி
யெந்தனையாளுந்தெய்வ இறைவனே போற்றி போற்றி
சிந்தனை வராமற் காப்பாய் சிவசுப்ர மண்யா போற்றி

அகவல்-முற்றிற்று.

---

இன்னனம்-ஆத்தங்கரை தெய்வச்சிலையான்.

சிவமயம்

குமாராண்டி ஞானியா ரருளிச்செய்த

# ஷடாக்ஷர விருத்தம்.

ஹரியுரையாற் பரமசிவ தருவேயானீ
ரம்மையுமை பவளுமலைக் கரசியாளுல்
திரியவுநீர் வாரியிலே மகரமானீர்
சிறுவனிலே பிரமனையுஞ் சிறையில் வைத்தீர்
விரிவாகச் செந்துசனை படைத்தீர் பின்னு
மெய்யாக மூவரமும் பெற்றீர் சித்தத்
துரியாதீ தத்தில் வளர் வாலைபால
சுப்ரமண்யசுவாமிநீ துணைசெய் வாயே, 1

கந்தனஃ துடல்மூலஞ் சுவாதிஷ்டானம்
நட்மணிபூ ரகமனு கதம்விசுத்தி
உந்தியதுக் கிணைய லனுதீதவ் விடேழும்
ஓம் நமசி வய ல வ. ர. ய. ஹ. க்ஷ,
சந்தனுயுங் கிளியுஞ்சல்வும். அ ஸ்ரீயும் றீயுஞ்
சாரனு னைபவ . அ. இ உ எ. ஒ. மே.
தொக்கவுட லிவ்வாலையின்றபால
சுப்ரமண்யு சுவாமி நீ துணைசெய் வாயே, 2

மொழிவதோன் றிரண்டுமூன் றைந்தாறெட்டு
முனைநாத விந்தாதி பிரணவத்துள்
ளொளியிலொளிக் குள்வாழும் ரூபாதாரத்
தாலெழுந்த கம்பனுநீ ஞானக்கண்ணின்
வழியாகத் தன்னறிவுக் கறிவைப் போற்றி
மனதிலன்புக் கன்பாக வணங்கத் தோற்றுஞ்
சுழியுடையோ னீயாகும் வாலபால
சுப்ரமண்ய சுவாமிநீ துணைசெய் வாயே, 3

இத்தனைவாம் பவக்கடலைத் தள்ளிவாழ்க
வேழிரண்டு வரையோ ராறு தட்டு
முத்தஷடா க்ஷரவசிய மாறியொட்டி
யுள்ளே சற்கோணமுக்கோண வட்டமிட்டுச்
சித்தமதாய்க் கரசியாச மங்கனியாசஞ்
செய்கருமம் பிராணையஞ் செபிக்கும்போது
சுத்தமதாய்க் கலிர்க்கும் வாலபால
சுப்ரமண்ய சுவாமிநீ துணைசெய்வாயே. 4

தருவமுக மீசான்ய நற்புருஷர்
தலங்குமகோ ரத்துடனே வாமதேவம்
பரிசத்ய சாதமதோ முகமதாறும்
பன்னிருகை பதினெண்கண் பார்வையெங்குந்
திருவருளாற் கிருபைபடரும் வரதநாதத்
தேவாதி தேவர்தொழு தேத்து நீதச்
சொரூபனுநீ கருணையுறும் வாலபால
சுப்ரமண்ய சுவாமிநீ துணைசெய்வாயே. 5

சிக்கந்தா மலைமேரு பரங்குன்றுதி
திருச்செந்தூர் வளர்திருவா வினஞ்சேரென்று
முக்கியமா மோகங்குன் றுடலோடே
முழங்குபழ முதிர்சோலைத் தலங்களாறும்
பச்குவமா யங்கங்கே கருணைகூர்ந்து
பலபலவா குங்கிருபை பாலித்துண்மைச்
சொக்கர்மக ஞானவளி வாலைபால
சுப்ரமன்ய சுவாமிநீ துணைசெய் வாயே. 6

இன்னுநமக் கேமிகவுங் கிருபைசெய்வோ
யிருப்பதுஞ்சற் கோணமுமுக் கோணவட்டம்
பின்னுமந்தச் சற்கோணின் முகங்களாறும்
பிணங்காம லாறுமுகங் களாக்கி
புண்ணியதை வட்டமிட்டுக் கோட்டையிட்டங்
குள்ளெழுதி யிதழ்பதினெ ரெட்டுள் நின்று
சொன்னபடி செய்யுமருள் வாலைபால
சுப்பிரமண்ய சுவாமிநீ துணைசெய்வாயே 7

சதியிலொரு வடிவெடுத்து வேலைவாங்கித்
தாரணியிற் சூரனையு மிரண்டாய்க்கீறி
பதிலான சேவல்மயி லேறிவள்ளி
யருள்தெய்வா னையுமிரண்டு பெண்ணுங்கொண்டு
பதிவாக வமரர்கடன் னிடுக்கந்தீர்த்துப்
பாரிலகப் பத்தருளம் பயந்தீர்த்தென்றுந்
துதிசெய்வோ ரிடங்குடியாம் வாலைபால
சுப்ரமண்ய சுவாமிநீ துணைசெய்வாயே 8

## ஷடாக்ஷர விருத்தம்

இம்மெனவு மண்டலமு மொன்றதாகு
மெழுத்தெல்லா மதில்முளைத்த எழுத்தேயாகும்
அம்மம்மா நாதவிந்து மஃதேயாகு
மதற்குமுன்னே பரவெளிதா னறிவின் கண்ணே
நம்முடலு முயிரதுவும் நானீ நீசா
நன்மைபெறு முண்மையருள் நாதா நீதச்
சும்மூலச் சூக்ஷாதி வாலைபால
சுப்ரமண்ய சுவாமிநீ துணைசெய்வாயே ௯

ஹரிமுதலிம் பெணவறையுமொன்பதாகு
மக்ஷரத்துக்கொருதமிழா யடியேன் சொன்னேன்
திரிபுர பவந்திக ழொளிபவனகி
சேர்பரி புரபவ னொளிபவனுக்
கிரிசய லொளிபவ சரஹண பவனுஞ்
சடாக்ஷா கடாக்ஷமது பத்தும்பாடத்
துரியாதி பெருங்கருணை வாலைபால
சுப்ரமண்ப சுவாமிநீ துணைசெய்வாயே 10

அரியென்று மரிகியென்று மரிஓமென்றும்
அ. இ, உ. எ- ஒ, ஔ. அஃ, கென்றும்
மிரிஐயுங் கிலியுஞ்சௌவுஞ் ஸ்ரீயும்றீயு
மிச்சமுறு மன்பத்தோ ரெழுத்தா மென்றும்
விரிவிருநூற் றெழுபத்து நால்ரண்டென்று
பேரைந்து மூன்றிரண்டு மொன்றுமென்றுந்
தரிவித்து நாதாதிக் குள்ளே யவ்வுந்
சரஹணபவ சிவஓம் சத்திவேலே, 11

## ஷடாக்ஷர விருத்தம்

ஆதியிரு ளறிவசைவ யோசை யொளிவெளியா
யருளான விருள்நடுவா யலிபெண்ணாணாய்
வேதிபிர்மா விஷ்ணுருத் திரனுமாகி
விஞ்ஞையுப தேசசத்தி யுருபமாகிச்
சோதியெனு மாதியிருள் வினாயகனுமாகிச்
சொற்கடங்காத் தேவாதி தேவராகிச்
சாதிபல வாயெங்கும் நிறைந்தாயவ்வுஞ்
சரஹண பவசிவஓம் சத்திவேலே 12

இப்பாகி பிங்காலி யிங்காக் கூவா
யினக்குழவி மொழிந்தகுர லெல்லாம்வந்து
உம்பதிலே யொடுங்கியது அகாரத்துள்ளே
யூன்றிவட்ட மிட்டிருத்த நாதவிந்தாம்
மம்மாகி யெட்டிரண்டும் லிங்கமாய்மும்
மண்டலமுங் காணுமதோ மௌனமூலஞ்
சண்முகமாய்ச் சிரலைவா யுவந்தாயவ்வுஞ்
சரஹண பவசிவஓம் சத்திவேலே 13

சுவதுவு மொழிவதுவுங் கேட்பதுவுமூல
மெழுப்படி நீர் தீக்கால்வா னதீதமெல்லாந்
தாயறியா முழக்கமெல்லா மாத்தாள் கூத்து
சத்திசிவ மொத்தாலோ சத்தமுண்டாம்
வீம்பென்ன தனித்திருந்தாற் பேச்சுண்டாமோ
விஞ்ஞையறி வானந்தம் வேதவித்தாஞ்
சாய்பசிவ சற்குருவும் நீயேயவ்வுஞ்
சரஹண பவசிவஓம் சத்திவேலே 14

உதிக்குமுடல் மூலவிந்தோ மிதமோநாலு
மொப்பமுயி விதழாறு நவ்வும் லவ்வும்
பதிப்பிறைபி ம் பஃதிதழு மவ்வும் வவ்வும்
பார்முநகோண் பன்னிரண்டிதழ் சிவ்வும் ரவ்வும்
மதிப்பறு கோண் பதினாறில் வவ்வும்யவ்வும்
வான்வளைய மம்மிதழ்ரண் டிதழொன்று
ததிக்கெழுத்தோ டைந்து பஞ்சாக்ஷரமேயவ்வுஞ்
சரஹண பவசிவஓம் சத்தி வேலே 15

ஊணிவட்ட மேறிவளைத் தொட்டி விழுந்தாதி
ஒகோகோ நாதவிந்தா மொற்றைக்கொம்பன்
காணியது பிரணவத்தாய் குண்டலித்தாய்
கணபதிக்காய் வேதவித்தாய் மூலவித்தாய்த்
தோணுமரி பிரியெழுத்திவ் வெழுத்தைத் தானே
தொட்டெழுதிப் பலபலவாய்த் தோணுமூலந்
தாணியும் நீ காணுவும் நீஓம் ஆமவ்வுஞ்
சரஹண பவசிவஓம் சத்திவேலே 16

எண்ணடங்காத் திருநாம மனந்தங்கோடி
யெழுதஜநத் தீர்நாம மிலக்கோவில்லை
பண்ணடங்கா கட்சநிற முயற்சி தாழ்ச்சிப்
பருமன் நம னெல்விகுரல் பலவாய் நோக்குங்
சண்ணடங்கா தறிவுகுறு சொல்லும் நாசி
காட்டுமனம் நாவில்ரசங் காணுதோமேற்
றண்ணடங்கா தவளவனும் நீயே யவ்வுஞ்
சரஹண பவ சிவ ஓம் சத்தி வேலே 17

# ஷடாக்ஷர விருத்தம்

ஏவலனும்நீ யிளவலது செய்வதும் நீயே
யிளவனிடத் தேசிலுகு செய்வதுவும் நீயே
காவலும்நீ சிலுகுதனை மாற்றுவது நீயே
கையயக்க மெய்மயக்கங் காட்டுவதுவு நீயே
போவதும் நீ வருவதுப் நீ யிருப்பது நீயே
பொல்லாங்கு நல்லாங்கு செய்வதுவு நீயே
தாவலிலைக் கில்லாத பொருள் நீ யவ்வுஞ்
சரஹுண பவசிவ ஓம் சத்தி வேலே 18

ஐயனுர் படைப்புடலி லடைப்புலி பிவிபர
மகரமுத லகரவரையி ரெட்டுஞ்சற்கோண
மெய்திரிகோண் ககரமுதல்டகரவரையீராறும்
வில்பிறையில் டகரமுதற் பகரவரை யீரைந்துஞ்
செய்நாற்கோண் பசரமுத லவ்வரையோராறுஞ்
சேர்மூலம் வகரமுதற் சவரையோர்நாலுந்
தெய்வானி லாயிழாயி க்ஷிரமேலவ்வுஞ்
சரஹறண பவசிவஓம் சத்தி வேலே 19

ஒருமூலம் வன்னிசுழி கால்மாறியாடு
மூம்படிபொன் தோலெலும்பு தசைநரம்புரோமம்
வருமட்டை மூளைவிந்து சலமுதிரம் பிறையில்
வன்னிதுயி லாண்பவஞ்சேர்ம்பனு போகங்கள்
கருமைகால் நடையோடல் நிலைகிடையி நுத்தல்
காமமயல் மோகமதக் குரோதம் வான்புகையே
தருமநிற முங்குணமு மிதுதா னவ்வுஞ்
சரஹறண பவசிவஓம் சத்திவேலே 20

ஓமதுவே சங்குவேல் போங்தமாகு
முணல்மூ ஞென்று சக்ரம் பரிசைசிந்து
வீமதண்டம் பிரம்பம்பு ஈட்டி நாதம்
வீசியவாள் தாடுவங்கி அக்கெனவேயாகும்
வாமதிரி சூலமது அகாரங்கிழே
வருங்கால்தான் நாதவிந்தாய் வலுக்குமூலங்
தாமதற்குக் கூர்மைபருள் நீயேயவ்வுஞ்
சரஹண பவசிவஓம் சத்திவேலே 21

ளவுமையு மக்னெவு மகரமாகு
மப்படியே ககரமுதல் னகரவீருப்
ஒவ்வும் அ- இ. உ, எ, ஒ மதிலே யொக்க
ஒடுங்குமகத்தீசர் பஞ்சபட்சிக்குள்ளே
சிவ்வும் வவ்வும் அவ்வும் உவ்வும் மவ்வும் ஒவ்வுன்
திரியிரண்டு மொன்று மைந்தும் ஆறெஞ்சூக்ஷஞ்
சவ்வாசி சூக்ஷாதி சூக்ஷமவ்வுஞ்
சரஹண பவசிவஓம் சத்திவேலே 22

கூஃகெனஒன் பதுவாச லடைக்குமூல
மறிவுசுழி நாடுசர மடைக்குமெட்டுஞ்
சிக்கெனநா சிசங்குமறி வுரைத்துப் பார்க்கத்
தெரிசனமா மோசையொளிர் சித்திமுத்தி
முக்கியமாம் வாலையவள் கிருபையுண்டு
முன்னூசி னுரைகேள்மெய் முறைதப்பாது
தக்குமன முரைத்தவர்க்காம் ஒம் ஆம் அவ்வுஞ்
சாஹற ண பவசிவஓம் சத்திவேலே 23

## இரட்டை யாசிரீய விருத்தம்

சிவவசிய சரஹண பவாவசிய சாம்பிராட்சிய
திருவாணி தேவிவசிய
ஜெகம்வசிய ஓம்நமோநாராயண வசிய
ஸ்ரீராம ஜெயம் வசியவா
வெவ்வருமென தளம்வசிய வ:லைதிரி புரைபுவனை
யென்னிதய மாகிவசிய
வெனதுமனம் வசியஜெக ராஜ ராஜேந்திரரு
மெப்போது மென்னுள்வசிய
அவ:மிருக மதுவசிய பூதப்பசா சசுரர்
ஆங்கார அரவுவசிய
ஆகாத சத்துருவு மென்னடிக் கீழ்வசிய
அருள் தந்து மெனையாளுவாய்
தவம் வசிய மேன்மை தரும் வள்ளிமண வாளனே
சுவாமிநா னுனை நம்பினேன்
சதுர்மறைக ளடிமுடியும் நடுமையமும் நிறைகின்ற
சண்முக சிவானந்தனே

முற்றிற்று

உ

சிவமயம்

# மனோன்மணி பூசை

## அகவல்

ஹரிஓம் மனோன்மணி அற்புதப்பொருளே
ஆதியே பரையே சோதியே சுடரே
ஹரிஓ மென்னு மக்ஷரத் தாதி
ஸ்ரீ ஓ மென்னுஞ் சிறப்பாத் தாளே

உருவடி வான வுத்தமக் கொழுந்தே
அருவடி வான ஆதிய ஞதி
ஓங்கிறே மான ஓங்கார றீங்கிலியே
ஆங்கிறே மான ஆதி யனுதி
புவனுப்பதியே போற்றி சிவய நம
சிவாய நம வென்று சிந்தித்த பேர்க்கு
அபாய மறுக்கு மறுகோணத்தி
சற்கோ ணத்தி சற்பா ணித்தி
சொற்பவனத்தி சூக்ஷும ரூபி
திரிபுர பவா திகழொளி பவா
பரிபுரபவா பவனொழி பவா
சயலொளி பவா சரஹண பவா
அயிலொளி யான அகார றீங்கிலியே
பராபரப் பொருளே பளிங்கொளி யாளே
நிராதாரமான நிஷ்கள ரூபி
சவ்வுங் கிலியும் யவ்வுமா னவளே
யவ்வும் உவ்வுஞ் சவ்வுமா னவளே
வாசியென்னும் வளரொளிக் கொழுந்தே
பூசனை புரியும் புவனுப் பதியே
கிரியுங் கிலியுஞ் சங் மங் யங் கூச
ஆற்பனத்துஞ்சி யமுத வர்ச்சினி
இறியும் இறியும் றீயுமானவளே
றீங்கா ரத்தி லிருக்கும் வடுகா வங் யங்
வடுகா யங்வங் ஆபத் தாரணு
பஞ்சாட் சரத்தின் பழம்பொரு ளாதி
நெஞ்சாட்சரத்தி னிறைந் திருப்பவளே
பிரிவரை யில்லாப் பெண்ணுக்கரசே
சிவாய வென்னுந் தெரிசனப் பொருளே

பூவார் குழலே புவனைப் பதியே
சாற்றும் பொருளே சௌந்தரியாளே
யேற்று மடியார்க் கிருதயபத்தி லெழுதாப் பொருளே
அவ்வுயி ராளே யவயசாட்சிய மூர்த வர்ச்சினி
செய்வினை தீர்க்குந் திரிகோணத்தி
ஐயுங் கிலியு மன்பத்தோ ரக்ஷரமுந்
தய்யுஞ் சவ்வுமேரய்த் தோன்றநின் றவளே
பேய னாகிலும் பெற்றருள் பிள்ளையைத்
தாயே காக்கத் தானுனக் கேபாரம்
யானின் னுடையான் அருவுருவாளே
சரணஞ் சரணம் நமஸ்தே சரணம்
புவன சௌந்தரி போற்றி நமஸ்தே
உருவடி வர யுபதேசங் கொடுத்துன்
றிருவடி தந்தருள் சிவசிவா சரணம்.

அகவல்-முற்றிற்று

அமாவாசி-முதற் பௌர்ணை வரையில்

மனோன்மணி பூசை.

## சோடச விருத்தம்.

அம்மாவாசி தானை அருபத்தாயே
அகண்டபரி பூரணியே யமலைசக்தி
நம்மாலே பாடறியே னினது பேரில்
நாவிலே வந்தருள்செய் நாயேனுக்குத்
தம்மாலே சோடச தோத்திரம் விளக்கத்
தயவுசெய்து நின்பதத்திற் றரிப்பாய் தேவி
சும்மா நீ யிருக்காதே கண்பார்த் தாள்வாய்
சோதியே மனோன் மணியே சுழினைவாழ்வே 1

பிரதமையிற் பிரவிடையாய்க் கலைவேருகிப்
பின்கலைவிட்டிடகலையிற் பிறந்தகன்னி
உறவாக விரவியைவிட்டகலாநின்ற
உமையவளே யென்பிறவி யொழியச் செய்வாய்
இரவாத வரத்துடனே யெமவரமெட் டெட்டுஞ்
சித்திக்க வெனக்குத் தந்து
சுருதியிலே வந்தருள்செய் யடியேனுக்குச்
சோதியே மனோன்மணியே சுழினை வாழ்வே.

துதிகையெனு முபயமெனும் இடைபுன்னென்றுஞ்
சுவர்க்கமெனு நரகமெனுஞ் சொல்லக்கேட்டு
மதிரவியாயடிமுடியா யுடலுயிராய்ப் பெண்ணாய்
வாழ்வாகித் தாழ்வாகி வழங்குந் தாயே
விதிதுலைந்து வினைதுலைந்து வெட்கங் கெட்டு
வீம்புபய மாசைதுக்கம் விட்டே யோடச்
தன்முகப்பார் மதிமுகத்தாய் சூட்சாருகூச்
சோதியே மனோன்மணியே சுழினை வாழ்வே 3

திருதிகையிற் சத்தமற்றுச் சுத்தமாகிச்
சிற்சொரூபந் தனைச்சேர்ந்த தெளிவே கண்ணே
உறுதியுடனுனது பத மகலச்சிந்தை
யுறவுசெய்வா யும்பரையே யுமையே தாயே
அறுதியா யிகத்தாசை யகன்றஞான
வானந்தத் தாசையதா யடியேனுக்குச்
சுருதியிலே வந்தெனது துயரந்தீர்ப்பாய்
சோதியே மனோன்மணியே சுழினை வாழ்வே 4

சதுர்த்தியிலே நாதவிடை வாமபூசை
தரவேனுந் தயவாக வடிவேன் செய்ய
மகிழ்ந்தபடி வரந்தரவா வாலையம்பா
வான் வெளியே வாசியே மௌனத்தானே
பதித்து முன்றன் பதித்திலென்றன் சென்னிதன்னைப்
பருதிமதி யகன்றுறு மகலாமற்றான்
துதித்தபடி நின்சரண மெனக்கிங் கீந்து
சோதியே மனோன் மணியே சுழிவாழ்வே 5

பஞ்சமியிற் பெற்றெடுத்தாய் சேயேன்றன்னைப்
பால் கொடுத்தாய் பதநடனஞ் செய்தா யம்மா
கொஞ்சமொரு காரியத்திற் றவக்கஞ் செய்தாய்
குழிப்பயிருங் கூரையின்மேல் மேலுமோதான்
தஞ்சமென நினதடிதாள் சார்ந்த மைந்தன்
சாக்கிரத்துட் டாளிணைக்குட் டானேதானைத்
துஞ்சியுந்துஞ் சாதிருக்க வழிதந்தாய்நீ
சோதியே மனோன்மணியே சுழிவாழ்வே 6

சஷ்டியெனுஞ் சடாக்ஷரத்துட் சதாசிவத்துட்
சைதன்ய போதகத்துட் டானே நின்றாய்
அஷ்டதிக்குன் னன்பர்களும் பெரியோர்வானோ
ரயனரியு மரன்முதலோ ரர்ச்சித்தார்கள்
இட்டமோ வுனைத் துதிக்கப் புலையேனுக்குக்
கிடைத்ததுவு முனதுடைய கிருபையம்மா
சுட்டியுடன் ரவிமதியுந் தரித்துநின்றாய்
சோதியே மனோன்மணியே சுழிவாழ்வே 7

சப்தமியாஞ் சபையுள்ளே கடலேழ்சூழச்
சப்தரிஷி சப்தகன்னி தணிந்துபோற்ற
அத்தரிடப் பாகமதாய் மூக்கோணத்து
ளமர்ந்திருந்த பேரின்ப வாதித்தாயே

இத்தனைநான் படுந்துயரங் காணாதான்போ
விருந்துவிட்டா லார்தீர்ப்பா ரெனைக்கண்பாரு
சுத்தமதி ரவி கலந்து வெளிவொளியாய் நின்ற
சோதியே மனோன்மணியே சுழினைவாழ்வே 8

அஷ்டமியு மஷ்டகில மஷ்டநாக
மஷ்டகிரி யஷ்ட கஜ மஷ்டபாலாள்
இஷ்டமுட னஷ்டதுற்கி மஷ்டகும்ப
மேற்றமா யஷ்டவாயி ரவருந் தானாய்த்
திட்டமுட னன்பர்களும் பெரியோர்வானோர்
செல்வியே யஷ்டதிக்கிற் றெவிட்டாத்தேனே
துஷ்டருக்கு மிஷ்டருக்குந் தானாய்நின்ற
சோதியே மனோன்மணியே சுழினை வாழ்வே 9

நவமியிலே நவரத்ன கிரீடஞ்சூட்டி
நவகோடிநா தருனைப் பணிந்து போற்றத்
தவம்பெருக வொருநான்கு பாலுமீய்ந்து
தற்காத்தாய் பிள்ளைகளைத் தயவுவைத்துச்
சிவவெளியுஞ் சிவபதமு மர்ச்சித்தார்கள்
சிவகாமி நினதுடைய செயலினாலே
சுவையெனக்கு மப்படியே தருவாயம்மா
சோதியே மனோன்மணியே சுழினை வாழ்வே 10

தசமியிலே சாக்கிரத்துக் கப்பாலேறிச்
சிலம்பொலியில் நினதுடைய திருத்தாள் சேர்த்து
நிர்மாக ஸ்துலசூட்சுமத் தோடன்றி
நிஷ்களத்தில் நீநானு மோன்றேயாகி
அசையாம லானந்த மயமாய் நின்ற
அறிவெளியாய் வரமருள்வா யகண்டரூபி
சசிகரமாய்ப் பிள்ளைமுகம் பார்த்தெடுப்பாய்
சோதியே மனோன்மணியே சுழினை வாழ்வே 11

ஏகாதேசி யாமீதா னத்துக்குள்ளே
இருந்தவுனை மயூர்பால மேறிக்கண்டு
சாகாத கால்வழியே யோடிச்சென்று
தப்பாமற் பிடித்த பின்பிங் கெங்கேபோவாய்
வேகாதத்லையைவிட்டு வெளியிற்போக
வேறுகெதி யெனையல்லா லுனக்கெங் குண்டு
தோகாய்நீ யெனதுளிருந் தென்னைக் காப்பாய்
சோதியே மனோன்மணியே சுழினைவாழ்வே 12

துவாதேசியா யிருந்தவிடை பின்மையஞ்
சுனைகடந்து தனல்கடந்து துவாத சாந்தம்
துவாதேசி யானபன்வி ரண்டுமோன்றாய்ச்
சுருதிமுடிந் திடமெனத்துச் சொல்லுமம்மா
துவாதேசி கேசரத்துள் ளாடிநின்ற
சுந்தரசௌந் தரசொரூபத் தாளே
துவாதேசி யெடுங்கிநின்ற மூலஞானச்
சோதியே மனோன்மணியே சுழினைவாழ்வே 13

திரயோதேசி யாயிருந்த விடைபின்மையஞ்
சேர்ந்துவர வாதாரந் தன்னிலேறிக்
குறிப்பறிந்து மாக்கிளைபைக் கடந்தமேவிக்
குருபதத் திற்றுருவாக விளங்குமன்னை
அறிவையறி வாலறிந்திங் கனுபவித்தே
யறிவொடுங்கு மாருரைப்பா ரன்பாகத்திற்
றுறவியிலே மனமிருக்கத் துணை செய்யம்மா
சோதியே மனோன்மணியே சுழினைவாழ்வே. 14

சதுர்த்தேசி யானதொரு நான்காய்நின்ற
தற்பறையே சிற்பறையே சற்கோணத்திற்
குதித்தோடிப் போகாம லெட்டிற் சேர்ந்து
கும்பகத்திற் றப்பனமாய்க் குடியா யென்னைப்

பதித்ததிலே சேர்த்துனது பாதஞ்சேர்ப்பாய்
பராபரையே யப்பரையே பண்புள்ளாளே
துதிக்கறியாப் பாலகனைக் காப்பாய் காப்பாய்
சோதியே மனோன்மணியே சுழினை வாழ்வே 15

சனல்சோடி ரவிகோடி காந்திகோடி
கண்கொள்ளா விடிகோடி மின்னல்கோடி
அனல்கோடி முகில்கோடி வனந்தங்கோடி
யண்டமே சனமூன்று லக்ஷங்கோடி
புனல்கோடி வினைகோடி தற்பரமுங்கோடி
புருவமையந் தடியிலகு சிறுபெண்ணுத்தாள்
முனைகோடி பாம் வாலாம்பிகை தன்னின்
முடிவணங்கித் திருவடியைக் கும்பிட்டேனே. 16

சோடச விருத்தம் முற்றிற்று.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்,

# விளம்பரம்

## சகலருக்கு மறிவிப்ப தியாதெனில்

நாமுள்ளபடி ஆராயுமிடத்து நம்மோடு தொடர்புடையவராயும் நமக்கு இனியவராயு முள்ளவர் சிவபெருமானே யன்றி மற்றொருவருமில்லை. ஆதலினால் அநாதியே மலத்தினாலே மறைக்கப்பட்டுள்ள, அறிவுந் தொழிலு முடையவர்களாய்த் தம்வயத்தரல்லாதவர்களாய் உள்ள பசுக்களாகிய நம்மோடு அநாதியே இரண்டறக்கலந்து நின்று நமக்

கெல்லாம் நித்தியானந்தப் பெருஞ் செல்வத்தைத் தந்த ருள விரும்பித் தந்தொழில்களெல்லாந் தம்பயன் சிறிதுங் குறியாது நம்பயன் குறித்த தொழில்களாகவே கொண்டு பெத்தநிலையிலே தாம் நம்முள்ளே மறைந்து நமக்குப் பின்னுகியும், முத்திநிலையிலே நம்மைத் தம்முள்ளே அடக்கித் தாம் நமக்கு முன்னுகியும் இப்படியே என்றும் உபசரிக்கும். இயல்புடைய பெருங்கருணைக் கடலாகிய பசுபதி சிவபெருமான் ஒருவரே. ஆதலினுல் அவரொருவரே நம்மோடு என்றுந் தொடர்புடையவராய் நமக்கு நம்மினும் இனியவராய் உள்ளவர், அவருக்கே நாமெல்லாம் உடைமைப்பொருள் அவருக்கே நாமெல்லா மீளா அடிமை ஆதலினுல், அவரிடத்திற்றுனே நாமெல்லாம் அன்பு செய்தல் வேண்டும். இனிமேல் இம்மனித சரீரம் பெறுதற்கு அரியதாதலாலும் இது இக்கணம் இருக்கும். இக்கணம் நீங்குமென்று அறிதற்கு அரிதாகிய நிலையாமை யுடையதாதலாலும் நாம் இடையருது எக்காலமும் அன்பு செய்தல்வேண்டும். சிவபெருமான் தம்மை மனதினுலே சிந்திக்கவும் நாவினுலே துதிக்கவுந் தம்மால் அதிட்டிக்கப்படுங் குருலிங்கசங்கமம் என்னும் மூவகைத் திருமேனியையுங் கண்களினுலே தரிசிக்கவுங் கைகளினுலே பூசிக்கவுங் கும்பிடவுந் தலையினுலே வணங்கவுங் கால்களினுலே வலஞ்செய்யவுந் தமது பெருமையையுந் தமது திருவடியார் பெருமையையும் காதுகளினுலே கேட்கவுமே இம்மனித சரீரத்தைத் தந்தருளினுர்.

ஆதலினுல், பசுக்களாகிய நம்முடைய இலக்கணங்களையும் நம்மைப் பந்தித்த பாசங்களின் இலக்கணங்களையும் பசுபதியாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும் எத்துணையும் பெரிய சிவபெருமான் எத்துணையுஞ் சிறிய நமக்கெல்லாம் இரங்கி எளிதில்வந்து ஓயாது என்றும் உப

கரிக்கும் பெருங்கருணையையும் இவ்வியல்பின் அனந்தங் கோடியில் ஒரு கூறுயினுமுடையவர் பிறரொருவரும் நமக்கில்லாமையையும் இடையறாது சிந்திக்கச் சிந்திக்க நமக்கு அச்சிவபெருமானிடத்து அன்புவிளையும், அவருடைய உண்மையை நினைக்குந்தோறுங் கேட்குந்தோறுங் காணுந்தோறுந் தன்வசமழிதலும் மயிர்க்கால் தோறுந் திவலையுண்டாகப் புளகங்கொள்ளலும் ஆனந்த வருவி பொழிதலும் விம்மலும் நாத்தழுதழுத்தலும், உரைதடுமாறலுமுண்டாகும், ஆதலினால் ஸ்ரீ ஸற்குருநாதனுடைய திருவடிப் பிரதாபத்தைப் புகழ்ந்து புகழ்ந்து தேகபதன பரியந்தஞ் சுவாநுபூதியைப் பிரியாதிருக்கும்படி பலவாறுகத் தோத்திரஞ்செய்து கொண்டிருக்க வேண்டியது சிவபெருமான் அன்பர்கள் வாக்காற் சொல்லும் பாமாலைக்கே மிகவும் பிரியமுள்ளவர். ஆகையால், கழைக்கூத்தன் கூத்தாடும் பொழுது அவன்கருத்து உடற்காப்பிலே வைக்கப்பட்டிருத்தல்போல் நாம் லௌகிக கருமஞ்செய்யும் பொழுதும் நமது கருத்துச் சிவபெருமானிடத்தே வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

சிவபெருமான் பாமாலைக்கே பிரியமுள்ளவரென்பதற்குப் பிரமாணம்.

---

## தாயுமானசுவாமிகள்

### பன்மாலை.

பன்மாலைத் திரளிருக்கத் தமையுணர்ந்தோர்
பாமாலைக்கே நீதான் பட்சமென்று
நன்மாலையா வெடுத்துச் சொன்னோர் நல்லோர்
நலமறிந்து கல்லாதா நானுஞ் சொன்னேன்
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்
தொண்டனே னெந்நாளுந் துதித்து நிற்பே

னென்மாலை யறிந்திங்கே வா வா வென்றே
 யெனைக் கலப்பாய் திருக்கருணை யெம்பிரானே
என்று கூறப்பட்டிருப்பதால் சதாகாலமுஞ்
 சிவபெருமானை யறவாமலிருக்க வேண்டியது
 இவை இலக்கண இலக்கியங்களுக் கொவ்வாமையாயி னுங் கற்றோர் குற்றங் கொள்ளா தங்கீகரித்துக் கொள்ள வேண்டியது.

இங்ஙனம்,
ஆத்தாங்கரை, பரமானந்த சுவாமிகள்,

உ
சிவமயம்.

ஆத்தங்கரை
பரமானந்த சுவாமிகள் அருளிச்செய்த

# பரசிவமாலை.

ஓங்கார மாகி யொளியாய் வெளியாகி
ஆங்கார மாயெழுந்த அன்பே பரசிவமே 1
அன்பேயென் னன்பில்வரும் அருவி பெருவாரி
இன்பமே தேனேயென் கண்ணே பரசிவமே 2
தேனே யமுதமே தெவிட்டாத வான்சுவையே
மானேந்துங் கையா வருவாய் பரசிவமே 3
வருவாயருள் புரிவாய்மயக்கமெல்லாந் தீர்த்தருள்வாய்
தருவா யுனதிருத தாளைப் பரசிவமே 4
தாளைத் தருவாய் தலையின்முடி மேற்றரித்தே
வேழைகளி தீர்ந்தே யிருப்பேன் பரசிவமே 5
இருப்பே னுனதுடைய விருதாளைக் கைப்பிடித்தே
அறுப்பா யிருவினையை ஐயா பரசிவமே 6

ஐயா பரசிவமே யாருமற்ற பாவியெனை
வையகத்தோர் நகைக்க வைத்தாய் பரசிவமே 7

வைத்தாய் பராபரமே வல்வேடர் வாழ்காட்டிற்
பொய்த்தேர்போ லாடவிட்டாய் போதும் பரசிவமே 8

போதுமையா பட்ட சளம் புழுக்கூட்டில் நானிருந்தே
யேதுசெய்வே னையோவெளியேன் பரசிவமே 9

ஏதுசெய்வே னிந்த விடிகிணற்றில் வாழ்புலைஞர்
வாதுசெய்கி ருரிக்க மாட்டேன் பரசிவமே 10

இருக்கவென்று லாகா திழிவான மெய்புடலிற்
றரிக்கே னாரைக்ஷணந்தான் சரணம் பரசிவமே 11

தரித்திருந்து ஞானத்தை சதமென்று நம்பியையோ
கருத்தழிந்து நின்றுமென்ன கண்டேன் பரசிவமே 12

கண்டதெல்லாம் பொய்யாச்சு காணுதரும்பொருளே
யென்றுன்னைக் காண்பே னெளியேன் பரசிவமே 13

என்றைக்குஞ் சிந்தை யிதயஞ் சிதையாமல்
எங் வகையால்வந் தெய்தும் பரசிவமே 14

சிவகாருண்யஞ் சிந்தைகுடி கொள்ளாமற்
பாவத்துக் காளாய்ப்படைத்தாய் பரசிவமே 15

ஆண்ட குருவினடிதொழுது போற்றாமல்
ஈண்டும் பிறவிக் கிடமானேன் பரசிவமே 16

சற்குருவைப் போற்றிச் சழக்கறுத்து நில்லாமல்
மைக்குழலார்மையல்தனில் மாண்டேன் பரசிவமே 17

அறிஞருடன் கூடி யவர்க்கடிமை செய்யாமல்
வெறியருடன் கூடிவிட்டேன் பரசிவமே 18

அன்பர்க் கெனையாளா யாக்கிவிட்டாலே போதும்
இன்பத்துடன் வாழ்ந்திருப்பேன் பரசிவமே 19

அஞ்செழுத்தி னுட்பொருளை யாராய்ந்து பாராமல்
வஞ்சிய ராசையினால் மறந்தேன் பரசிவமே 20
பட்டிப் பசுக்களையும் பதியிலிருந்துச்சிவ
நிஷ்டை செய்ய நின்னருள் தந்தாளாய் பரசிவமே 21
பாசத்தை நீக்கிப் பசுவை பதியில் விட்டுப்
பூசித்து நின்று புகழ்வேன் பரசிவமே 22
தஞ்சமென்று உன்பதத்திற் சார்ந்தே னுனதடிமை
யஞ்சலியுங் கொள்ளாயபரமே பரசிவமே 23

கள்ளரெனுங் காலர் கட்டிப்பிடிக்கவந்தாற்
றள்ளி விழுந்தடியிற் றுடிப்பேன் பரசிவமே 24
வஞ்சமறலி வருமுன்னே யுன்னடியிற்
பஞ்சமலர் தூவவருள் புரிவாய் பரசிவமே 25
பந்தமெனுஞ் சாகரத்திற் படிந்தடிமை போகாமல்
வந்தெனை யாட்கொள்ள வருவாய் பரசிவமே 26
காதலால் நின்னைக் கருதினே னெந்தனையுன்
பாதபங் கயத்தைப் பதித்தாள் பரசிவமே 27
உன்னை நான்கண்டு யுருகிவழி சேராமல்
கன்னி வலையிலகப்பட்டேன் பரசிவமே 28

பட்டுடையும் பொற்பணியும் பரவையுரு மெய்யெனவே
செட்டலைந்து போனேன் கெதியாமோ பரசிவமே 29
வேடிக்கையுஞ் சொகுசும் விட்டுனைத்தான் போற்றாமல்
ஆடித்திரிந்திங் கலுத்தேன் பரசிவமே 30
கர்த்தனே யுன்னை யந்தி காலமுச்சி மூன்றினுமே
பத்தியுடன் றொழுது பணிவேன் பரசிவமே 31

உனக்கடிமையாகி யுன்னடிக் கன்புசெய்ய
யெனக்கஞ்ச லென்றிங் கெதிர்வருவாய் பரசிவமே 32
பாவிபடுங் கண்கலக்கம் பார்த்திரங்கி வராவிட்டால்
ஆவிக்கொரு துணையா ரையா பரசிவமே 33

சேவித்து நீர்சொரியச் சிவசிவா வென்றேங்கிப்
பாவித்துப் பூசைசெய்வேன் பரனே பரசிவமே 34
ஆதியா யந்தமுமா யப்பா லுக் கப்பாலாய்ச்
சோதிமய மாயிருந்த சுடரே பரசிவமே 35
எவ்வுயிருந் தானா யிருக்கும் பரம்பொருளே
அவ்வுயிரின யானொருவ னன்றோ பரசிவமே 36
என்று மிருப்போமென் றிதய மிகத்துடித்துச்
சண்டைபிடிக்கச் சரியோ பரசிவமே 37

இடமும் பெருவாழ்வு மில்லறமுஞ் சுற்றமெது
முடலழியும்போ துடன்வருமோ பரசிவமே 38
நாற்றச்சடலத்தை நடைமனையைத் தோற்பொதியை
யேற்றித் திரிந்துவிட்டே னென்னே பரசிவமே 39
பொல்லாப் பிறவிதனைக் கைடாச பொய்யுலகை
வெல்லாப் பெரும்பாவி யானேன் பரசிவமே 40
பூட்டில்லாக் கோட்டையினுட் பொல்லாமணிவிளக்கை
நாட்டும் வகைதெரியா நாயேன் பரசிவமே 41

துன்பம் துடைத்துத் துடிப்படக்கி மாறாத
வின்பந் தருவா யென்னையா பரசிவமே 42

உள்ளும் புறமு மொருமையில்லாப் பாவியெனைக்
கள்ளந் தவிர்த்துக் காப்பாய் பரசிவமே 43

காற்றுத் துருத்தியெனக் கண்டுங் கடையேனென்
சோற்றுத் துருத்தியைச் சுமப்பனோ பரசிவமே 44
சின்மயனே தன்மயனே சிற்பரனே தற்பரனே
நன்மயனே சிற்சத்தி நாதா பரசிவமே 45
கூடிப்பிரிந்திருந்த கொள்கை யறியாமற்
றேடித் திரிந்து திகைத்தேன் பரசிவமே 46
இரவுபக லில்லா விடமதனைக் கண்டுநெஞ்சம்
பரிவுபெறச் செய்யப் படாதோ பரசிவமே 47

ஆக்கை மிகவாடி யங்கபங்கமான வெனைத்
தூக்கி யெடுப்பதெப்போ சொல்லாய் பரசிவமே 48
தூண்டி யிருளறுத்துத் தூண்டா விளக்கேற்றி
நீண்ட மயக்கொழிந்து நிற்பனோ பரசிவமே 49
வீட்டிருளைப்போக்கி வெளியிலொளி வானவனைக்
காட்டினிற் றேடியென்ன கண்டேன் பரசிவமே 50
வேஷந்தனைப் போட்டு வேடிக்கை யாய்த்திரிந்து
காசுபணம் பறிக்கக் கற்றேன் பரசிவமே 51

காசாசை கொண்டு கலங்கித் திரிந்தலைந்து
தோஷியாய்ப் போனேன் துணையே பரசிவமே 52
உன்னைத்தவிர வொருவர் துணை காணே
னென்னைக் கைவிட்டு விடலாமோ பரசிவமே 53
சிந்தைதனைத் திருத்திச் சித்திமுத்தி தந்தெனக்கு
வந்தெனையாட் கொள்ள வருவாய் பரசிவமே 54
மாயை மயக்கொழிந்தால் மற்றொன்றை நாடுவனோ
ஆசை யொழியுதில்லை ஐயா பரசிவமே 55

ஆசை யொழிந்தே ஐய ரடிபணியாத்
தோஷியாய் நான்றிரிந்து சுழன்றேன் பரசிவமே 56
மூலாக்கினி கொளுத்தி மூட்டி நிலா மண்டபத்திற்
பாலைக்கறந் துண்ணப் பகருய் பரசிவமே 57
பன்னிருகால் மண்டபத்திற் பதியிற் கனையருகிற்
சென்று விளையாடச் செய்வாய் பரசிவமே 58
காலைமறவாமற் கண்டேங்கி நில்லாமற்
மேலை வழிகாட்டி விடுவாய் பரசிவமே 59
நாசி நுனிவட்டம் நடுவே திருநடனம்
வாசியின் மேலேற்றி வைப்பாய் பரசிவமே 60
இருக்க வசையாம லியங்குஞ் சுழிமுனையி
லுருகா துருகிநிற்க வசையாய் பரசிவமே 61

விந்து மிருந்து விளங்குந் தலந்தனிலே
நந்தி யருகிலெல்லை நாட்டாய் பரசிவமே 62
குந்தியிருந்தடிமை குசாலாய் படுத்துறங்கிச்
சிந்தை மகிழ்ந்திருக்கச் செய்வாய் பரசிவமே 63
ஓசைமணி மண்டபத்தி லோங்காரமா யெழும்பி
யாசை யொழிக்கவந்த ஐயா பரசிவமே 64

ஊற்று பெருந்துறைநா டட்புகுந்து சங்கநிதி
தீர்த்தமஃ தாடச் செய்வாய் பரசிவமே 65
பேயாய்த் திரிந்து பிணமாய்க் கிடக்கவைத்துத்
தாயை மணமுடித்துத் தருவாய் பரசிவமே 66

தாயை மணமுடித்துத் தந்தா லவளமுதம்
வாயாற் குடித்து மகிழ்வேன் பரசிவமே 67
ஆத்தா ளென்னையீன்ற அபிராமி வல்லிமுகம்
பார்த்தே யிருந்து பசியொழிப்பேன் பரசிவமே 68
உற்றாரு மில்லை யொருவர் துணைகாணேன்
பெற்றாளை யுங்காணேன் பேதை பரசிவமே 69
குண்டலி சத்தி கோதையபிராமி தன்னைக்
கண்டாற் கதிதிருங் கண்ணே பரசிவமே 70
தேவி மனோன்மணியைத் தெவிட்டாத தெள்ளமுதை
யாவித்துணை பாலை யணைவனோ பரசிவமே 71
அண்டமெல்லாந் தானுயனைவர்க்குந் தாயாளைக்
கண்டு களித்திருக்கக் காட்டாய் பரசிவமே 72
கண்டிங் கிருபாதங் கருவிமடி மீதில்வைத்துக்
கொண்டிருக்கச் செய்தாற் குறையேயா பரசிவமே 73
பட்டுடுத்திப் பொட்டுமிட்டுப் பலபூஷணம்பூட்டிக்
கட்டியணைத்துக் கலப்பனோ பரசிவமே 74
கால்பிடித்து மூலக் கனலைமதி மண்டபத்தின்
மேலிருத்தி விடுவனோ பரசிவமே 75

ஆறாதா ரந்தாண்டி யவளீந்த பாலருந்திச்
சோபந்தெளிந்து சுகிப்பனோ பரசிவமே 76
மூலக் குகைக்குள்ளே மூடிசூட்டி வைத்தெனக்கு
மோனப்பால் தன்னைக் கொடுப்பாளோ பரசிவமே 77
மோன மௌனமணி மூச்சிலம்பி னோசைகண்டு
வாமப்பா லுண்டு மகிழ்வனோ பரசிவமே 78
ஆதி முதலென்னை யாண்டடிமை கொண்டிருந்த
தாயைநீ கைபிடித்துத் தருவாய் பரசிவமே 79

சின்முத் திரையாளைத் தெவிட்டாத பொற்கனியை
யென்றைக் கருந்தி யிருப்பேன் பரசிவமே 80
தேன்கொடுக்குப் போலாடித் திரிந்தென்னை யாண்டாளை
வாக்கில் மௌனமதாய் வைப்பாய் பரசிவமே 81
செத்தசவம்போலிருந்து செபிக்கச்சொன்ன தாயார்க்கிங்
கெத்தனை தான் தெண்டமிடுவேன் பரசிவமே 82
தாயாரைத் தேடித் தலைபிரட்டுக் கொண்டவெந்தன்
காய மழியுமுன்னே காப்பாய் பரசிவமே 83
ஓம் நமசிவாயமென வுதித்த பரஞ்சுடரே
யாமெனவே தானெழுந்த வையா பரசிவமே 84
உம்மென் றுதித்த ஓங்கார கம்பநுனி
இம்மென் றிருந்தவிரு கண்ணே பரசிவமே 85

சந்திரனைச் சூரியனைத் தானே சுழிமுனையாப்
விந்துமய மாய்நின்ற விளக்கொளியே பரசிவமே 86

சியென் றுதித்துத் தெளிந்த சதாசிவத்தை
வாய்கொண்டு சொல்லலாமோ பரசிவமே 87

தஞ்சமென் றுன்னைச் சரணமிட்ட பாவியெனக்
கஞ்சலென் று வந்துகையா ளணைப்பாய் பரசிவமே 88
செஞ்சேவடி தூக்கித் திருச்சிலம்பு தானசையக்
குஞ்சிதபாதத்தைக் கொடுப்பாய் பரசிவமே 89

மாணேந்துங் கையாலே வாரி யெடுத்தணைக்கக்
காணேனே ஐயோவென் கண்ணே பரசிவமே 90
சத்தி சிவமாய்த் தானவனாய் நிற்கவைத்து
முத்தியளிப்பாய் முக்கண்ணா பரசிவமே 91
மால்வைத்த சிந்தை மயக்கமறச் சென்னிமிசை
கால்வைத்தாற் போதுமென் கண்ணே பரசிவமே 92
கரியுரித்துப் போற்றினவுன் கற்பூர மேனியிலே
பரிவட்ட மாய்ப்போடப் படாதோ பரசிவமே 93
சர்ப்பாபரணமதாய்த் தான் றரித்துக்கொண்டாலென்
னப்பாவது போதுமையா பரசிவமே 94
ஏங்கி யிடையும்நெஞ்சமே பேழையை நீ வாவென்றே
பாங்குபெறச் செய்யப்படாதோ பரசிவமே 95
ஏதேது சொன்னாலு மெள்ளளவும் நீயிரங்காச்
சூதேது முண்டோ வுளவு சொல்லாய் பரசிவமே 96
உள்ளக் கொதிப்பகல வுள்ளுள்ளே யானந்த
வெள்ளக் கருணைமத வேளே பரசிவமே 97
சல்லானே பாலனுங் கற்ற வறிஞருட
சொல்லாற் கண்டுன்னைத் துடர்ந்தேன் பரசிவமே 98
திருவடியை நாடாச் சிறியேனை வாவென்
றருகி லழைப்பதெப்போ ஐயா பரசிவமே 99
பத்திநெறி யில்லாப் பாஞான மில்லேனை
முத்தியளிப்பதெப்போ முக்கண்ணா பரசிவமே 100
கருத்தமல மாயைவலி கண்ணெதிரே தோற்றும
லறுத்தெனை யாட்கொள்வதெப்போதையா பரசிவமே 101
பொய்யுலகை மெய்யாய்ப் புகுந்தவெனைத் தூக்கி
ஐயா நினதடியி லணைப்பாய் பரசிவமே 102
இருக்கடலில் மூழ்குமெனை யீர்த்து வெளியாக்கி
யருட்கடலில் மூழ்கவைய்யு மையா பரசிவமே 102

எல்லாம் நீயென் றுரைத்த வென்குருவே நின்னையொரு
சொல்லாலே கண்டு துதித்தேன் பரசிவமே 104
வாழைமட லுரித்து வருந்தண்டைக் கண்டதுபோல்
பாழுமுட லினுனைப்பார்ப்பேன் பரசிவமே 105
பார்த்தவிடமெல்லாம் பரவெளியாய்த் தோன்றுமொரு
வார்த்தை சொல்வதெப்போ வருவாய் பரசிவமே 106
நானென்றும் நீயென்றும் நடுவிருந்த தன்மரபைத்
தானே யகற்றியருள் தாராய் பரசிவமே 107
பட்டப் பகலாகப் பார்த்தே பரவெளியே
யுற்றுற்றுப் பார்த்துப் பவமொழிப்பேன் பரசிவமே 108
விட்டவிடத்தே யடுத்தே மேவி யிருக்கும்படி
தொட்டுநீ காட்டாயென் றனையே பரசிவமே 109
குருவைப்பணியா ஞானக் கொடிபோல நின்றவெனைத்
தருவி லமைக்கக் கருதாதென் பரசிவமே 110
வல்லாநீ யென்னை மாதா வயிற்றினிலே
தள்ளாதே ஐயா சரணம் பரசிவமே 111
பெற்றலுத்தாள் தாயார் பிறந்தலுத்தேன் யான்பாவி
யுற்றதுணை நின்னையல்லா லுண்டோ பரசிவமே 112
ஆற்றிற் கரைத்தபுளி யாக்கிவிடாம லன்பாற்
போற்றித் திருவுளம் பற்றையா பரசிவமே 113
ஆற்றொடுந் தும்பை யணிந்தாடு மம்பலவா
கூற்றனை வெல்லக் கொடுவாள் பரசிவமே 114
இந்தத் திரேக மிருக்கும்போ தையாவே
மைந்தனைக் கார்க்க வருவாய் பரசிவமே 115
பரமுனக்கு வேறு பயமுமில்லை யென்றனக்குக்
கரங்குவித்து நிற்கின்றேன் காப்பாய் பரசிவமே 116
நின்றநிலை பேராமல் நினைவிலொன்று சேராம
லென்றுநீ செய்வா யென்னையா பரசிவமே 117

கூட்டி லசைப்பட்ட புழுக்குளவி யுருவானாற்போல்
வீட்டி விருத்தி விடுவாய் பரசிவமே 118

எங்குப் பரவடியா யென்வடிவு நின்வடிவாய்க்
கங்குல் பகல்தனினுங் காண்டபன் பரசிவமே 119

வாசிதனை நிறுத்தி வாய்விட்டுப் பேசாமற்
பூசித்து நின்னைப் புகழ்வேனோ பரசிவமே 120

அல்லும் பகலு மறிவையறி வாலறிந்து
சொல்லு மிறந்து சுகிப்பனோ பரசிவமே 121

எவரெவர்க ளெப்படிக் கண்டெந்தபடி நினைத்தா
லவரவர்கட் கப்படியே யானாய் பரசிவமே 122

அன்னையே யானறியா திந்தவண்ணஞ் சொன்னதெல்லா
மன்னைபோற் சேட்டிங் கணைப்பாய் பரசிவமே 123

கால்பிடித்துக்கண்ணில் வைத்துக் கண்கலங்கி நின்றழுதான்
றாள்பிடித்துச் சொன்னேனருள் தாராய் பரசிவமே 124

தூங்காமற் றூங்கித் தொழுது கரங்குவிக்க
வாங்காரந் தன்னை யகற்றாய் பரசிவமே 125

வஞ்சியர்செய் மோசத்துக்கு பறலிசெயும் நாசத்துக்கு
மஞ்சி யுனதுபத மடைந்தேன் பரசிவமே 126

சாதி சனங்களுடன் றனிருந்து பட்டதுயர்
போதும் போதும் போதும் போதும்பரசிவமே 127

சித்தர்கள் வாழி சிவஞ்சனீபோர் வாழி
முத்தர்கள் வாழி முக்கண்ணா பரசிவமே 128

வாழி பரமகுரு வாழி யடியார்வாழி
யேழை யடியேன்வாழி யென்கண்ணே பரசிவமே 129

நமசிவய வாழி நான்மறையுந் தான்வாழி
யிமையோரும் வாழி யிதை படிப்போரும் வாழியதே 130

பரசிவமாலை முற்றிற்று

# விளம்பரம்

## ஸ்ரீ ஜெயலெக்ஷிமி விலாஸ பிரஸ்,

மேலசந்நதி சிதம்பரம்

ஷை அச்சுக்கூடத்தில் புதிய எழுத்துக்களாலும் ஆர்னமெட்டு பார்டர்களாலும் குறித்த நேரத்தில் குறைந்த சார்ஜுக்கு அவரவர் விரும்பும்மாதிரி அச்செயற்றி கொடுக்கப்படும். ஷை அச்சுக்கூடத்தில் ரூலிங், & பைண்டிங் வேலைகளும் செய்துகொடுக்கப்படும்.

## புஸ்தக விளம்பரம்

எமது புஸ்தகஷாப்பில் பலவித இங்கிலீஷ், தமிழ், வேதாந்தம், [illegible], துணுக்கு கதை, நாடகம், ஆர்மோனி டிராமா சினிமா கிராமபோன் புஸ்தகங்களும், பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய எல்லாவித புஸ்தகங்களும் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கும் உபாத்தியாயர்களுக்கும் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

இப்படிக்கு

C. G. இராமானுஜம் செட்டியார் & சன்ஸ்,

பிரிண்டர்ஸ், பப்ளிஷர்ஸ் & புக்செல்லர்ஸ்

மேலசந்நதி, சிதம்பரம்.